## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

# வடலூர் வள்ளலார் பேருந்து நிலையம் அருகே தேர்தல் பிரச்சார சிறப்புரையாற்றுகிறார்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!





தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாளை (12.04.2026-ஞாயிற்றுக்கிழமை) மாலை 04.00 மணியளவில் வடலூர் வள்ளலார் பேருந்து நிலையம் எதிரில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் சார்பில் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களையும், ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கும் கழக வேட்பாளர்கள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்கு கேட்டு பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளார்.

அதுசமயம் இப்பிரச்சார கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக தொகுதி பார்வையாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, பூத் கழக இளைஞரணி மற்றும் மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி,

வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள்(BDA), ஸ்டாலினின் மகளிர் படையினர்கள், கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர் - கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

## கழகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து – இன்று புதுக்கோட்டையில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றும் பிரம்மாண்ட பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் எஸ்,ரகுபதி – கே,கே,செல்லப்பாண்டியன் அறிக்கை!

புதுக்கோட்டை, ஏப். 11 –

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர், திருமயம் தொகுதி கழக வேட்பாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலா ளர், விராலிமலை சட்ட மன்றத் தொகுதி வேட்பா ளர் கே.கே.செல்லப்பாண் டியன் ஆகியோர் வெளி யிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டையில் மதச்சார் பற்ற முற்போக் குக் கூட்டணி வேட்பா ளர்களை ஆதரித்து இன்று (11ம் தேதி – சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் பிரம்மாண்டமான பொது க்கூட்டம் புதுக்கோட்டை திருச்சி சாலையில் அரசு தொழிற்ப யிற்சி கல்லூரி அருகில் பள்ளத்தி வயல் பகுதியில் நடைபெறுகிறது.





மாபெரும் பொதுக்கூட்டத்தில் தி.மு.க. தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக வெற்றி வேட்பாளர்கள் திருமயம் அமைச்சர் எஸ்.ரகுபதி, ஆலங்குடி அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை டாக்டர் வை. முத்துராஜா, விராலிமலை கே.கே.செல்லபாண்டியன் மாவட்ட தி.மு.க. செயல ளர் ஆகியோருக்கு உதயசூரியன் சின்னத்திற்கும், அறந்தாங்கி காங்கிரஸ் வேட்பாளர் எஸ்.டி.ராமச் சந்திரனுக்கு கை சின்னத்திற்கும், கந்தர்வ கோட்டை சட்டமன்றத் தொகுதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வேட்பாளர் எம்.சின்னதுரைக்கு அரிவாள் சுத்தியல் சின்னத்திற்கும் வாக்குகள் கேட்டு சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதி நிதிகள், அனைத்து அணி களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள். கழக முன்னோடிகள், செயல்வீரர்கள், மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு சிறப் பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளனர்.

## சிவகங்கை மாவட்டம் - மானாமதுரை சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்

# திருமதி தமிழரசி ரவிக்குமார் - மானாமதுரை நகரில் தீவிர வாக்கு சேகரிப்பு!

## பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு!

சிவகங்கை. ஏப்ரல் 11

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் இரண்டாவது முறையாக போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் திருமதி தமிழரசி ரவிக்குமார் நேற்று முன்தினம் மானாமதுரை நகரில் தனது தேர்தல் பிரச்சாரத்தை துவக்கினார் .கடந்த இரண்டு நாட்களாக நகரில் பல்வேறு இடங்களில் சென்ற திருமதி தமிழரசி ரவிக்குமார் காட்டு உடைகுளம், அன்பு நகர், சாஸ்தா நகர் ,அண்ணா நகர், பட்டத்தரசி உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட வார்டுகளுக்கு வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்து பேசியதாவது.

கடந்த ஐந்தாண்டுகளில் கழக தலைவர் முதல் வர் தளபதி அவர்கள் மானாமதுரை நகர்மற்றும் சட்டமன்ற தொகுதிக்கும் பல்வேறு அளப்பரிய சாதனை திட்டங்களை நிறைவேற்றியுள்ளார். பேரூராட்சியாக இருந்த மானாமதுரை நகராட்சியாக அறிவிக்கப்பட்டது அந்த நகராட்சி அறிவிக்கப்பட்டதன் மூலம் நகரில் ரூபாய் 100 கோடிக்கு மேல் பல்வேறு அடிப்படை திட்டங்கள் நிறை வேற்றப்பட்டுள்ளது. நீண்ட நாட்கள் கோரிக்கையாக இருந்த மானாமதுரை யில் அரசு மகளிர் கல்லூரி அறிவிக்கப்பட்டு ரூபாய் 18 கோடி செலவில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது . தொழிற் பயிற்சி கட்டிடம் கட்டப்பட்டு மாணவர்கள் சேர்ந்து பயின்று வருகின்றனர்.இது போல் வைகை அணையில்தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளது. நகரில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ந்து மருத்துவமனை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே பல்வேறு சாதனைகள் செய்துவிட்டு உங்களிடம் வாக்கு கேட்டு வந்துள்ளேன். ஆனால் இங்கு அ.தி.மு.க . அதனுடன் போட்டியிடும் பாஜக வேட்பாளர் இத்தொகுதிக்கு புதியவர் தொகுதியை பற்றி மும், தொகுதி மக்கள் பற்றி அறியாதவர். அவருக்கு வாக்களிப்பது என்பது செல்லாத வாக்குகள் ஆகிவிடும் பா.ஜ.க .அ.தி.மு.க . போர்வையில் தமிழகத்தில் நுழைய பார்க்கிறது.அதை நாம் விரட்டி அடிக்க வேண்டும். எனவே தமிழக முதல்வர் அவர்களின் நல்லாட்சி மீண்டும் தொடர இரண்டாவது முறையாக எனக்கு வாக்களித்து என்னை வெற்றி பெற செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. பேசினார்.

அவருடன் மானாமதுரை நகர்கழக செயலாளர் க.பொன்னுச்சாமி, நகர் தலைவர் முன்னாள் எம்.எல்.ஏ. எஸ். மாரியப்பன் கென்னடி, நகர் மன்ற, துணைத்தலைவர் பாலா சுந்தர் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாத்துரை, நிர்வாகிகள் ரவிச்சந்திரன், குட்டி, ராசு, மயில்வாகனன், மூர்த்தி, பாஸ்கரன்,மகளீரணி சண்முகப் ரியா, புருஷோத்தமன் காங்கிரஸ் வீரய்யா சி.பி.ஐ. சிபிஎம் .வீரபாண்டி, தே.மு.தி.க தர்மா ராமு, அசோக், அன்பரசன் ம.தி.மு.க முகமது சலீம் எஸ். டி. பி. ஐ. உட்பட கூட்டணி கட்சியினர் சென்றிருந்தார்கள் .சென்ற இடங்களில் தமிழரசி ரவிக்குமாரை ஆரத்தி எடுத்தும் பெண்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026 மதுரை மாநகர் மாவட்டம்

# மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி - தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்டம், மதுரை மத்திய சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள் செம்மையாக நடைபெற்றிட தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**மதுரை மத்திய தொகுதி தேர்தல் பணிக்குழு**

தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் -
ஆர். கோபால கிருஷ்ணன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
மா. ஒச்சுபாலு, மாவட்ட அவைத் தலைவர்
மா. ஜெயராம், தலைமை செயற்குழு உறுப்பினர்
சி. சின்னம்மாள், மாவட்ட துணைச் செயலாளர்
ஆர். சௌந்தரராஜன், இளைஞர் அணி அமைப்பாளர்
எம். பிரம்மநாயகம், பொதுக்குழு உறுப்பினர்
எம்.ஜி. முத்துகணேசன், பொதுக்குழு உறுப்பினர்
பி.டி. மணிமாறன், பொதுக்குழு உறுப்பினர்
மிசா எம். பாண்டியன், முன்னாள் துணை மேயர்
ஏ. மாணிக்கம், முன்னாள் மண்டலத் தலைவர்
என். சிவக்குமார், ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்
எஸ்.சேக் இஸ்மாயில், சிறுபான்மையினர் நலஉரிமைப்பிரிவு துணைச் செயலாளர்
கொடைவீடு எஸ்.எம்.ஆர்.அருண்குமார், முன்னாள் மாமன்ற உறுப்பினர்
எஸ்.எஸ்.மாறவர்மன், ஆரப்பாளையம் பகுதிச் செயலாளர்
என். நீலமேகம், தத்தனேரி பகுதிச் செயலாளர்
எம். சரவண பாண்டியன், சிம்மக்கல் பகுதிச் செயலாளர்
பி.கே. செந்தில், எல்லிஸ் நகர் பகுதிச் செயலாளர்
சு.பா. கண்ணன், மேலமாசி வீதி பகுதிச் செயலாளர்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 10.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026

### தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

### கழக மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என்.தீபக் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்



## தலைமைக் கழக அறிவிப்பு

| தேதி | நேரம் | இடம் | வெற்றி வேட்பாளர்கள் |
|---|---|---|---|
| 11.04.2026 | காலை 09.00 மணி | திருவிடைமருதூர் (2 இடங்கள்) | கோவி செழியன் |
| 12.04.2026 | மதியம் 12.00 மணி | திருவாரூர் | பூண்டி கே கலைவாணன் |
| | மாலை 04.00 மணி | மன்னார்குடி | டிஆர்பி ராஜா |
| | மாலை 06.00 மணி | தஞ்சாவூர் | சன் ராமநாதன் |
| | மாலை 07.00 மணி | திருவெறும்பூர் (2 இடங்கள்) | அன்பில் மகேஷ் |
| 13.04.2026 | காலை 09.00 to 11.00 | திருச்சி மேற்கு (2 இடங்கள்) | கே என் நேரு |
| | மதியம் 12.00 மணி | திருச்சி கிழக்கு | இனிகோ இருதயராஜ் |
| | மாலை 04.00 to 06.00 | மதுரை மத்தி (2 இடங்கள்) | பி டி ஆர் பழனிவேல் தியாகராஜன் |
| | இரவு 07.00 மாலை to 08.00 | மதுரை கிழக்கு | பி மூர்த்தி |
| | இரவு 09.00 மணி | மதுரை வடக்கு | கோ தளபதி |
| 14.04.2026 | காலை 09.00 11.00 | திருச்சுழி (2 இடங்கள்) | தங்கம் தென்னரசு |
| | மதியம் 12.00 | அருப்புக்கோட்டை (2 இடங்கள்) | கே கே எஸ் எஸ் ஆர் இராமச்சந்திரன் |
| | மாலை 04.00 to 06.00 | தூத்துக்குடி (2 இடங்கள்) | கீதாஜீவன் |
| | இரவு 07.00 to 09.00 | திருச்செந்தூர் (2 இடங்கள்) | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் |
| 15.04.2026 | காலை 09.00 to 10.00 | ராதாபுரம் | மு. அப்பாவு |
| | காலை 11.00 to 12.00 | நாகர்கோவில் | எஸ். ஆஸ்டின் |
| | மதியம் 01.00 | கன்னியாகுமரி | ஆர் மகேஷ் |
| | மாலை 04.00 to 05.00 | பாளையங்கோட்டை | மு. அப்துல் வஹாப் |
| | மாலை 06.00 to இரவு 08.00 | திருநெல்வேலி (2 இடங்கள்) | எஸ் சுப்பிரமணியன் |
| 16.04.2026 | காலை 09.00 to 11.00 | தென்காசி (2 இடங்கள்) | டாக்டர் கலை கதிரவன் |
| | மதியம் 12.00 மணி | வாசுதேவநல்லூர் (2 இடங்கள் ) | ஈஸ்வரன் ராஜா |
| 18.04.2026 | காலை 09.00 to 11.00 | துறைமுகம் (2 இடங்கள்) | பிகே சேகர்பாபு |
| | காலை 11.30 to 01.00 | திரு வி க நகர் | கே எஸ் ரவிச்சந்திரன் |
| | மாலை 04.00 to 06.00 | எழும்பூர் (2 இடங்கள் ) | தமிழன் பிரசன்னா |
| | மாலை 07.00 to இரவு 09.00 | வில்லிவாக்கம் (2 இடங்கள்) | கார்த்திக் மோகன் |
| 19.04.2026 | காலை 09.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை | கொளத்தூர் (10 இடங்கள்) | மாண்புமிகு கழகத் தலைவர் |
| 20.04.2026 | 09.00 காலை to 11.00 | ஆயிரம் விளக்கு (2 இடங்கள்) | டாக்டர் எழிலன் |
| | மதியம் 12.00 மணி | அண்ணா நகர் | சிற்றரசு |
| | மாலை 03.00 to இரவு 10.00 | சேப்பாக்கம் & திருவல்லிக்கேணி | மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 09.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## நெல்லை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர்

# சு.சுப்பிரமணியன் சுத்தமல்லி விலக்கில் - கழக அரசின் சாதனைகளைக் கூறி வாக்கு சேகரித்தார்!

### பெண்கள் உற்சாக வரவேற்பு!

நெல்லை.ஏப்.11.

நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளரும் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளருமான சு.சுப்பிரமணியன் சுத்தமல்லி விலக்கில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து அவரது சொந்த ஊரான சுத்தமல்லியில் பிரச்சாரம் மேற் கொண்ட போது அங்கு அவருக்கு உற்சாகமான,எழுச்சியான, மிகவும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் சு. சுப்பிரமணியன் நெல்லை தொகுதிக்கு உட்பட்ட மானூர் தெற்கு ஒன்றியம் சுத்தமல்லி விலக்கில் கழக அரசின் 5 ஆண்டு சாதனைகளை விழா வாரியாக எடுத்துக் கூறினார். அதனைத் தொடர்ந்து திராவிட மாடல், முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் தேர்தல் அறிக்கைகள் ஒவ்வொன்றாக பதாகைகளை கையில் ஏந்தியபடி எடுத்துக் கூறினார்.குறிப்பாக இல்லத்தரசி திட்டம் ரூபாய் 8000 கூப்பன் பதாகையை அவர் தூக்கிப்பிடித்து காட்டியதும் அங்கு கூடியிருந்த பெண்கள் அதை பார்த்ததும் உற்சாகமாக கைதட்டி தங்கள் ஆதரவை மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். பொதுமக்களின் குறைகளை உடனடியாக நிறைவேற்றும் அடிப்படையில் இங்கு பொது மக்களின் நலன் கருதி நெல்லை சட்டமன்ற தொகுதியின் கிளை அலுவலகம் திறக்கப்படும் என்றார்.

பின்னர் கழக வேட்பாளர் சு.சுப்பிரமணியன் தனது சொந்த ஊரான சுத்தமல்லியில் ஏ.கே.தெரு,கோவில் பத்து,வ.உ.சி.நகர்,முப்பிடாதிஅம்மன் கோவில் தெருபெரியார் நகர், ஆகிய தெருக்களுக்கு சென்று வாக்காளர்களை சந்தித்து தீவிர வாக்கு சேர்க்கும் பணியில் ஈடுபட்டார்.அங்கு அவருக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கொண்ட நகரம் அம்பலம் கொண்ட நகரம் ரோஸ் கார்டன் எக்ஸ்டன்சன் ஏரியா, சங்கன் திரடு, தெற்கு சங்கன் திரடு, வடக்கு சங்கன் திரடு, பாரதியார்புரம், மேலக்கல்லூர், முப்புடாதி அம்மன் கோவில் தெரு,ஜெ.ஜெ.நகர், கோடகநல்லூர் சி.ஆர்.காலனி, நடுக்கல்லூர், கோடகநல்லூர், கீழகல்லூர், பட்டன் கல்லூர், பழவூர்பட்டன்கல்லூர், பழவூர் எம்ஜிஆர் நகர் ஆகிய பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டார்.

முன்னதாக நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் ப்ரூஸ் பங்கேற்று நெல்லை தொகுதி வேட்பாளர் சுப்பிரமணியனுக்கு சுத்தமல்லி விளக்கில் உதயசூரியன் சின்னத்திற்கு அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்கு சேகரித்தார்.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினரும் நெல்லை தொகுதி பார்வையாளருமான பேச்சிபாண்டியன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், பொதுக்குழு உறுப்பினர் துணை மேயர் ராஜ்,ஒன்றிய செயலாளர் மாரியப்பன்,முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க.மணி,மாமன்ற உறுப்பினர் உலகநாதன், சுத்தமல்லி கிளைச்செயலாளர் அருணாசலம் பிள்ளை, நெல்லை மாநகர அயலக அணி அமைப்பாளர் செந்தில் உள்பட கழக நிர்வாகிகள்,சார்பு அணிகளின் நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. பழனியப்பன்

**ஏப்ரல் 11 (1979)**



திராவிடர் கழகத்தில் உறுப்பினராகி, கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, வளவனூர் குமாரக்குப்பம் பேரூர்க் கழக செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர். குறிப்பாக 1953ல் கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில், கல்லக்குடி ரயில் நிறுத்தும் போராட்டத்தில் பங்கேற்று, கைது செய்யப்பட்டு, ஆறுமாதம் சிறைத் தண்டனை பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
தி.மு.க.